தமிழ்நாடு அரசு
2017

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012–14
[நிமு. எண். 197/2009
[விலை ரூ. 1.60 பைசா

# தமிழ்நாடு அரசின் அரசிதழ்

## அசாதாரணம்அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது

எண். 328 சென்னை, வெள்ளிக்கிழமை, அக்டோபர் 13, 2017
புரட்டாசி 27, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு 2048

### பகுதி 2 – பிரிவு 2

### பொது மக்களின் ஒரு பிரிவினரின் நலனுக்காக தலைமைச் செயலகத்தின் துறைகளால் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் அல்லது ஆணைகள்

### அரசு அறிவிப்புகள்

### வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை

### தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்

தற்காலிக வரிவிதிக்கத்தக்க நபர்கள் மாநிலங்களுக்கிடையேயான கைவினைப் பொருட்களின் வரிவிக்கத் தக்க வழங்கல்களை மேற்கொள்ளும் போது இச்சட்டத்தின்கீழ் பதிவு பெறுவதில் இருந்து விலக்களித்தல்

### அறிவிக்கைகளின் திருத்தங்கள்

*[அரசாணை நிலை எண். 125 வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1) 13 அக்டோபர் 2017 புரட்டாசி 27 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/வவப/858(அ-1)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் பிரிவு 23–ன் உட்பிரிவு 2 –ல் (தமிழ்நாடு சட்டம் 19/ 2017), அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைபடுத்தி, குழுவின் பரிந்துரைகளின் படி, தமிழக ஆளுநரால், செப்டம்பர் 15, 2017 நாள் அன்று தமிழக அரசின் அசாதாரண அரசிதழ் பிரிவு –2, பகுதி –2 வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை அறிவிக்கை எண் II(2)/வவப/783(இ-2)/2017 –ன் பக்கங்கள் 1–2ல் பின்தொடரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது, அதாவது:–

### திருத்தங்கள்

கூறப்பட்ட அறிவிக்கைகளின் அட்டவணையில்–

(i) வரிசை எண். 9 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பதிலாகபின்தொடரும் மாற்றீடு செய்யப்பட வேண்டும்.அதாவது:–

| | | |
|---|---|---|
| 9 | நெய்பொருள்(Textile) (கைத்தறி பொருட்கள்) கையால் செய்யப்பட்ட சால்வைகள், தோளாடை அங்கி (stoles) மற்றும் கழுத்து துண்டு (scraves) | 50, 58, 61, 62, 63 உள்ளடக்கிய |

(ii) வரிசை எண்.28–க்கு பிறகு மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பின்தொடர்பவை இடைசேர்க்கப் படுகிறது. அதாவது

| | | |
|---|---|---|
| 29 | சங்கிலி தையல் | எந்த அத்தியாயத்திலும் |
| 30 | பின்னல் சித்தர வேலை பாடுகளுக்குரிய கம்பிளி இழை(crewel), நாம்டா, காபா | எந்த அத்தியாயத்திலும் |
| 31 | வரிச்சல் கீற்றினால் முடையப்பட்ட பொருட்கள்(Wicker),காற்றாடி வகை பொருட்கள் (Willow products) | எந்த அத்தியாயத்திலும் |
| 32 | தோரணம்(Toran) | எந்த அத்தியாயத்திலும் |
| 33 | ஷோலா( shola)வால் செய்யப்பட்ட பொருட்கள் | எந்த அத்தியாயத்திலும் |

## மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் குறுக்கு– அதிகாரமளித்தலால் அமர்த்தப்பட்ட உரிய அதிகாரிகள்

*[அரசாணை நிலை எண். 126 வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1) 13 அக்டோபர் 2017*

*புரட்டாசி 27 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/ வவப/858(a-2)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின் பிரிவு 6–ன், உட்பிரிவு 1 –ல் (தமிழ்நாடு சட்டம் 19/2017), (இனிமேல் இந்த அறிவிக்கையில் "தநாசமசேவசட்டம்'' என்று குறிப்பிடப் படுகிறது) அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, குழுவின் பரிந்துரைகளின்படி தமிழக ஆளுநரால், குறிப்பிடப் படுவது என்னவென்றால், மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017–ன் (மத்திய சட்டம் 12, 2017) (இனிமேல் இந்த அறிவிக்கையில் "மசமசேவசட்டம்'' என்று குறிப்பிடப் படுகிறது) கீழ் அமர்த்தப் பட்ட அலுவலர்கள் தான், மசமசேவ சட்டத்தின் பிரிவு 54 அல்லது பிரிவு 55ன் கீழ் வாரிய ஆணையரால் அமர்த்தப்பட்டு அதிகாரம் அளிக்கப்பட்ட சரியான அலுவலர்களே, தநாசமசேவT சட்டம்'' பிரிவு 54 அல்லது பிரிவு 55 மற்றும் அதன் விதிகளின் கீழ், திருப்புத்தொகை ஒப்பளிப்பு செய்யும் நோக்கத்திக்கு செயல்பட உரிய அதிகாரிகள் (இனிமேல் இந்த அறிவிக்கையில் "கூறப்பட்ட அதிகாரிகள்" என்று குறிப்பிடப் படுகிறது) கூறப்பட்ட அதிகாாரியின் கோட்ட செயல்எல்லையில் அமைந்த பதிவுபெற்ற நபரைப் பொறுத்த வகையில்,கூறப்பட்ட அதிகாரியிடம் திருப்புத்தொகை ஒப்பளிப்பு கோரிவிண்ணப்பிக்கலாம்.

## தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள்வரி சட்டம் 2017ன் கீழ் சிறுவரி செலுத்துவோரால் விலைப்பட்டியல் வழங்கும் நேரத்தில் வரி செலுத்துதல்

*[அரசாணை நிலை எண். 127 வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1) 13 அக்டோபர் 2017*

*புரட்டாசி 27 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/ வவப/858(a-3)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின் பிரிவு 148–ல் (தமிழ்நாடு சட்டம் 19. 2017), (இனிமேல் இந்த அறிவிப்பில் கூறப்பட்ட சட்டம் என்றும்) அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, குழுவின் பரிந்துரைகளின்படி தமிழக ஆளுநரால், அறிவிக்கப்படுவது என்னவென்றால், பதிவுபெற்ற நபரின் மொத்தத்தொகை முந்தைய நிதியாண்டில் ரூபாய் ஒரு கோடியே ஐம்பது லட்சத்துக்கு மிகாமல் அல்லது பதிவுபெற்ற நபரின் மொத்தத்தொகை ரூபாய் ஒரு கோடியே ஐம்பது லட்சத்திற்கு கீழ், அத்தகையநபர் பதிவு பெற்ற ஆண்டில் இருக்கும் பட்சத்தில், மற்றும் அவர் கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 10–கீழ் இணக்க வரி விதிப்பிற்கு விருப்பம் தெரிவிக்காமல் இருந்து, கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு–12ன் உட்பிரிவு 2–ன், உட்கூறு (அ)–ல் குறிப்பிட்டபடி, சரக்குகள் வெளிவழங்கலுக்கான மாநிலவரியினை வழங்கல் நேரத்தில் செலுத்தும் வகையான நபராக இருந்தால், சூழ்நிலைகள் கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 14–ன் விதிமுறைகளை ஈர்க்கும் போது மற்றும் அவர் கூறப்பட்ட சட்டம் மற்றும் அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் அத்தியாம் 9–க்கு ஏற்ப விவரங்கள் மற்றும் நமூனாக்களை வரிசெலுத்துவதற்கானகுறிப்பிட்ட காலத்திற்குள் அத்தகைய வகையான பதிவு பெற்ற நபரால் கூறப்பட்ட சட்டத்தில் குறிப்பிட்டவாறு செய்யப்பட வேண்டும்.

## தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின் கீழ் அறிவிக்கைகள்

அறிவிக்கையின் திருத்தம்

*[அரசாணை நிலை எண். 128 வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1) 13 அக்டோபர் 2017*

*புரட்டாசி 27 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண்.II(2)/ வவப/858(a-4)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின் பிரிவு 10–ன் கீழ் உட்பிரிவு 1 –ல் (தமிழ்நாடு சட்டம் 19 / 2017)அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, குழுவின் பரிந்துரைகளின்படி தமிழக ஆளுநரால், வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் அறிவிக்கை எண். II (2)/CTR/532(d-1)/2017,ஜுன் 29, 2017 தேதியன்று வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசின் அசாதாரணமான அரசிதழ் பகுதி–II பிரிவு–2–ன்வெளியிடப்பட்ட பக்கங்கள் 1–2 –ல் இதன்மூலம் பின்தொடரும் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது, அதாவது:–

**திருத்தம்**

கூறப்பட்ட அறிவிக்கையில் ‘‘எழுபத்தி ஐந்து லட்சம் ரூபாய்’’ என்ற வார்த்தைகளுக்கு பதிலாக ‘‘ஒரு கோடி’’ என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்படுகிறது.

*[அரசாணை நிலை எண். 129 வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1) 13 அக்டோபர் 2017*

*புரட்டாசி 27 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண்.II(2)/ வவப/858(a-5)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின் பிரிவு 9–ன் உட்பிரிவு–1 , பிரிவு 11–ன் உட்பிரிவு–1, பிரிவு 15–ன் உட்பிரிவு–5 மற்றும் பிரிவு 16–ன் உட்பிரிவு 1 –கீழ் (தமிழ்நாடு சட்டம் 19. 2017) அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, குழுவின் பரிந்துரைகளின்படி தமிழக ஆளுநரால், மற்றும் அவ்வாறு செய்வது பொதுநலனுக்கு அவசியம் எனமனநிறைவுடைந்து இருத்தலால், வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் அறிவிக்கை எண். II (2)/ வவப/532(d-14)/2017, ஜுன் 29, 2017 தேதியன்று வெளியிடப்பட்ட தமிழக அரசின் அசாதாரண அரசிதழ் பகுதி–II, பிரிவு–2–ன்பக்கங்கள் 85–119 ல்இதன்மூலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகிறது, அதாவது:–

**திருத்தங்கள்**

கூறப்பட்ட அறிவிக்கையில் :–

**<u>(i) அட்டவணையில்–</u>**

(அ) வரிசை எண்.3–க்கு எதிராக,

A (iii) –ஆம் இனத்தில், நிரல் (3)–இல், ‘‘அரசாங்கம், ஒரு உள்ளூர் அதிகாரி அல்லது ஒரு அரசாங்கத்துக்குரிய அதிகாரி’’ என்ற வார்த்தைகளுக்கு பதிலாக ‘‘மைய அரசாங்கம், மாநில அரசாங்கம், ஒருங்கிணைந்த ஆட்சிப்பகுதி, ஒரு உள்ளூர்அதிகாரி,ஒரு அரசாங்கத்துக்குரிய அதிகாரி அல்லது ஒரு அரசு நிறுவனம் என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்படுகிறது.

B. (vi) –ஆம் இனத்தில், நிரல் (3)–இல், ‘‘ஒரு உள்ளூர் அதிகாரி அல்லது ஒரு அரசாங்கத்துக்குரிய அதிகாரி’’ என்ற வார்த்தைகளுக்கு பதிலாக ‘‘ஒரு உள்ளூர் அதிகாரி, ஒரு அரசாங்கத்துக்குரிய அதிகாரி அல்லது ஒரு அரசு நிறுவனம்‘‘ என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்படுகிறது.

C. (iii) மற்றும் (vi) –ஆம் இனத்தில், நிரல் **(5)–**இல் இருக்கின்ற பதிவுக்கு பதிலாக,பின்தொடரும் பதிவு மாற்றீடு செய்யப்படுகிறது, அதாவது:–

"இருப்பினும், அரசு நிறுவனத்திற்கு சேவைகள் வழங்கி இருந்தால், அவை கூறப்பட்ட நிறுவனத்தால் பெறப்பட்ட சேவை என்பது பொருந்துகின்ற இனங்களில் அவர்களுக்காக மத்திய அரசினால், மாநில அரசினால், ஒருங்கிணைந்த ஆட்சிப்பகுதியால் அல்லது உள்ளூர் அதிகாரியால் ஒப்படைக்கப்பட்ட வேலை தொடர்புடையதாக இருக்க வேண்டும்."

D. (vii) ஆம் இனத்தில், நிரல்கள் **(3), (4)** மற்றும் **(5)** மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பதிலாக பின்தொடரும் மாற்றீடு செய்யப்படுகிறது, அதாவது:–

| (3) | (4) | (5) |
|---|---|---|
| (vii) மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைந்த ஆட்சிப்பகுதி, உள்ளூர் அதிகாரி , ஒரு அரசாங்கத்துக்குரிய அதிகாரி அல்லது ஒரு அரசு நிறுவனத்திற்கு அளிக்கப்பட்ட, உட்புகுத்திக் கொண்ட தலையாய பூமி வேலை சம்பந்தப்பட்ட (அதாவது, பணி ஒப்பந்தத்தின் மதிப்பில் 75 விழுக்காட்டிற்கு மேல் அமைந்திருந்தால்), தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன், பிரிவு 2–ஆம், உட்கூறு (119)–இல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தபணிக்கான பலசேர்ந்தமைந்த வழங்கல். | 2.5 | "இருப்பினும், அரசு நிறுவனத்திற்கு சேவைகள் வழங்கி இருந்தால், அவை கூறப்பட்ட நிறுவனத்தால் பெறப்பட்ட சேவை என்பது பொருந்துகின்ற இனங்களில் அவர்களுக்காக மத்தியய அரசினால், மாநில அரசினால், ஒருங்கிணைந்த ஆட்சிப்பகுதியால் அல்லது உள்ளூர் அதிகாரியால் ஒப்படைக்கப்பட்ட வேலை தொடர்புடையதாக இருக்க வேண்டும்." |
| (viii)அடிப்படை கோட்டின் அருகாமை புள்ளியின் இருந்து, கரையிலிருந்து சற்று விலகிய 12 கடல் மைல் தூரத்திற்கு மேல், எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வு, அகழ்வு மற்றும் உற்பத்திக்கு (E&P) தொடர்புடைய கரையிலிருந்த விலகிய வேலை ஒப்பந்தம் மற்றும் அதன் தொடர்புடைய சேவைகள், தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் பிரிவு 2, உட்கூறு 119 –ல் கூறிப்பிட்டுள்ள ஒப்பந்த பணிக்கானபலசேர்ந்தமைந்த வழங்கல் வரையறுக்கப்பட்டுள்ளது. | 6 | – |
| (ix) மேற்குறிப்பிட்ட கட்டுமான சேவைகள், (i), (ii), (iii), (iv), (v), (vi), (vii) மற்றும்(viii) நீங்கலாக. | 9 | – |

(b) வரிசை எண் **8–**க்கு எதிராக, இனம் (ii)–ல் நிரல் **(5)–**ல் "அல்லது" என்ற வார்த்தைக்கு பதிலாக "மற்றும்" என்ற வார்த்தை மாற்றீடு செய்யப்படுகிறது.

(c) வரிசை எண் **8–**க்கு எதிராக, இனம் (vi) –ல் நிரல்கள் **(3), (4)** மற்றும் **(5)** மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பின்தொடரும் மாற்றீடு செய்யப்படுகிறது, அதாவது:–

| (3) | (4) | (5) |
|---|---|---|
| (vi) பயணிகளின் போக்குவரத்திற்காக வடிவமைக்கப்பட்ட ஏதாவது மோட்டார் வாகனத்தில், எங்கு எரிபொருளின் விலையை, சேவை பெறுபவரின் மறுபயன் கட்டணத்தில் சேர்த்திருந்தால். | 2.5 | இருப்பினும், சேவை வழங்குவதற்கான பயன்படுத்தப்பட்ட, சரக்குகள் மற்றும் சேவைகளின் மீது செலுத்தப்பட்ட உள்ளீட்டு வரி வரவு ஒத்த இயல்புடைய வணிகத்தின் உள்ளீட்டு சேவையின், உள்ளீட்டு வரி வரவு நீங்கலாக, (அதாவது, மோட்டார் வாகனத்தில் பயணிகள் போக்குவரத்து சேவை வழங்கும் வேறொருவரிடமிருந்து பெறப்பட்ட சேவை, மோட்டார் வாகனத்தை வாடகைக்கு விடுவதில்) எடுத்துக் கொள்ளக் கூடாது. (துயவு செய்து விளக்கம் எண். (iv)– பார்க்கவும். |
| | | அல்லது, |
| | 6 | |

(d) வரிசை எண் 9–க்கு எதிராக உள்ள இனம் (v), நிரல்கள் (3), (4) மற்றும் (5) மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பதிலாக, பின்தொடரும் மாற்றீடு செய்யப்படுகிறது, அதாவது:–

| (3) | (4) | (5) |
|---|---|---|
| (v) குழாய்வழி மூலமாக இயற்கை எரிவாயு போக்குவரத்து | 2.5 | இருப்பினும், சேவை வழங்குவதற்காக பயன்படுத்தப் பட்ட, சரக்குகள் மற்றும் சேவைகளின் மீது செலுத்தப்பட உள்ளீட்டு வரி வரவினை எடுத்துக் கொள்ளக் கூடாது. (துயவு செய்து விளக்கம் எண்.(iv)-ஐ பார்க்கவும் |
| | | அல்லது |
| | 6 | – |
| (vi)சரக்குகள் போக்குவரத்து சேவைகள் மேற்கூறப்பட்ட(i), (ii), (iii), (iv) மற்றும் (v) நீங்கலாக. | 9 | – |

(e) வரிசை எண் 10–க்கு எதிராக, உள்ள இனம் (1), நிரல்கள் (3), (4) மற்றும் (5) மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு, பின்தொடரும் மாற்றீடு செய்யப்படுகிறது, அதாவது:–

| (3) | (4) | (5) |
|---|---|---|
| "(i) பயணிகளின் போக்குவரத்திற்காக வடிவமைக்கப்பட்ட மோட்டார் வாகனத்தை வாடகைக்கு விட்டு,எங்கு எரிபொருளின் விலையை, சேவை பெறுபவன் மறுபயன் கட்டணத்தில் சேர்த்திருந்தால். | 2.5 | இருப்பினும், சேவை வழங்குவதற்கான பயன் படுத்தப்பட்ட, சரக்குகள் மற்றும் சேவைகளின் மீது செலுத்தப்பட்ட உள்ளீட்டு வரி வரவு ஒத்த இயல்புடைய வணிகத்தின் உள்ளிட்டு சேவையின், உள்ளிட்டு வரி வரவு நீங்கலாக, (அதாவது, மோட்டார் வாகனத்தில் பயணிகள் போக்குவரத்து சேவை வழங்கும் வேறொருவரிடமிருந்து பெறப்பட்ட சேவை, மோட்டார் வாகனத்தை வாடகைக்கு விடுவதில்) எடுத்துக் கொள்ளக் கூடாது. (துயவு செய்து விளக்கம் எண். (iv)– பார்க்கவும்.) |
| | | அல்லது |

| | | |
|---|---|---|
| | 6 | – |

(f) வரிசை எண் 15–க்கு எதிராக, உள்ள இனம் (V), நிரல்கள் (3), (4) மற்றும் (5) மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பதிலாக, பின்தொடரும் மாற்றீடு செய்யப்படுகிறது, அதாவது:–

| (3) | (4) | (5) |
|---|---|---|
| (V)2017 ஜுலை1–க்கு முன்பு வாங்கப் பட்டு மற்றும் குத்தகைக்கு விடப்படும் மோட்டார் வாகனங்கள் | ஒத்த இயல்புடைய சுரக்குகள் வழங்கலில், பொருட்களின் உரிமை மாற்றத்திற்கு பொருந்துவது போல் மாநில வரி விகிதத்தில் 65 விழுக்காடு. குறிப்பு: 2020 ஜுலை1–க்கு அன்று அல்லது அதற்கு பிறகு இப்பதிவில் இருக்கும் எதுவும் பொருந்தாது. | – |
| (VI)நிதி மற்றும் அதன்தொடர்பான சேவைகள் மேற்கூறப்பட்ட(i), (ii), (iii), (iv) மற்றும் (v) நீங்கலாக. | 9 | – |

(g) வரிசை எண் 17–க்கு எதிராக, இனம் (vi)-இல் நிரல் (3) மற்றும் நிரல்கள் (3), (4) மற்றும் (5) மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பதிலாக, பின்தொடரும் மாற்றீடு செய்யப்படுகிறது, அதாவது:–

| (3) | (4) | (5) |
|---|---|---|
| (VI) 01.07.2017 முன்பு வாங்கப் பட்டு மற்றும் குத்தகைக்கு விடப்படும் மோட்டார் வாகனங்கள் | ஒத்த இயல்புடைய சரக்குகள் வழங்கலில், பொருட்களின் உரிமை மாற்றத்திற்கு பொருந்துவது போல் மாநில வரி விகிதத்தில் 65 விழுக்காடு. குறிப்பு: 01.07.2020 அன்று அல்லது அதற்கு பிறகு இப்பதிவில் இருக்கும் எதுவும் பொருந்தாது. | – |
| (VII) மேற்கூறப்பட்ட, குத்தகை அல்லது வாடகை சேவைகள், இயக்குபவரோடு அல்லது இயக்குவர் இல்லாமல் இனங்கள் (i), (ii), (iii), (iv), (v), மற்றும் (vi) நீங்கலாக. | ஒத்த இயல்புடைய சரக்குகள் வழங்கலில், பொருட்களின் உரிமை மாற்றத்திற்கு பொருந்துவது போல் அதே வீத மாநில வரி. | – |

(h) வரிசை எண் 26–க்கு எதிராக, நிரல் (3)–ல்:–

(i) இனம் (i) –இல், உள்இனம் (c) –ற்கு பதிலாக, பின்வரும் உள்இனம் மாற்றீடு செய்யப்படுகிறது, அதாவது:–

“(C) 1975–ஆம் ஆண்டு சுங்க வரிச் சட்டத்தின் (மையச் சட்டம் 51/1975) முதல் அட்டவணையில் அத்தியாயம் 71–ன் கீழ் வரும் அனைத்து பொருட்கள்”

(ii) இனம் (i)–ல், உள்இனம் (C) –க்கு பிறகு பின்தொடரும் உள்இனம்இடைசேர்க்கப்படுகிறது, அதாவது:–

“(d)” மாசமசேவ @ 2.5 விழுக்காடு அல்லது வரி ஏதுமில்லாததை ஈர்க்கும், அத்தியாயம் 48–இல் 49–ன் கீழ் வரும் அனைத்து பொருட்களையும் அச்சிடுவதற்கு.

(iii) இனம் (i) –இல், உள்இனம் (e) -க்கு பிறகு, பின்வரும் உள்இனம் இடைசேர்க்கப்படுகிறது,அதாவது:–

‘‘(f) 1975–ஆம் ஆண்டு சுங்க வரிகட்டண வீத பட்டியல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 51 /1975) முதல் அட்டவணையின், அத்தியாயம் 1 முதல் 22 –இன் கீழ் வரும் அனைத்து உணவு மற்றும் உணவு பொருட்கள்.’’

(g) 1975–ஆம் ஆண்டு சுங்க வரி கட்டண வீத பட்டியல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 51 /1975) முதல் அட்டவணையின், அத்தியாயம் 23–இன் கீழ்வரும் அனைத்து பொருட்கள், சொல்லப்பட்ட அத்தியாயத்தின் கட்டண வீத பட்டியல் இனம் 23091000 கீழ் வரும் சில்லரை விற்பனை செய்யப்படும் நாய் மற்றும் பூனை உணவு நீங்கலாக.

(h) 1975–ஆம் ஆண்டு சுங்க வரி கட்டண வீத பட்டியல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 51 /1975)–ஆம் அட்டவணையில்,கட்டண வீத பட்டியல் இனம் 690 10010–இன் கீழ்வரும் களிமண் செங்கல் தயாரிப்புகள்.

(iv) இனம் (1)–க்கு பிறகு, நிரல்கள் (3), (4) மற்றும் (5)–ல் மற்றும் அதனுடைய தொடர்புடைய பதிவுகளுக்கு பதிலாக, பின்தொடர்பவை இடைசேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

| (3) | (4) | (5) |
|---|---|---|
| “(ia)சில்லரை வேலைகள் மூலமான சேவைகள் தொடர்பான:–<br>(அ) குடை உற்பத்தி<br>(ஆ) மாசமசேவ 6 விழுக்காடு ஈர்க்கும், அத்தியாயம் 48 அல்லது 49 –இன்கீழ் வரும் அனைத்து அச்சிடும் பொருட்களுக்கும். | 6 | – |

(v) “இனம் (ii)–இல், உள்இனம் (ஆ)–க்கு பிறகு, பின்தொடரும் உள்இனம் இடைசேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

‘‘(C) மாசமசேவ2.5 விழுக்காடு அல்லது ஏதுமில்லை என்பதை ஈர்க்கும், அத்தியாயம் 48 &49 கீழ் வரும் அனைத்து அச்சிடும் பொருட்களுக்கும்.’’

(vi) இனம் (ii) –க்கு பிறகு, நிரல்கள் (3), (4) மற்றும் (5)–ல் மற்றும் அதனுடைய தொடர்புடைய பதிவுகளுக்கு பதிலாக, பின்தொடர்பவை இடைசேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

| (3) | (4) | (5) |
|---|---|---|
| “(iia) மாசமசேவ 6 விழுக்காடு ஈர்க்கும், அத்தியாயம் 48 அல்லது 49–இன் கீழ்வரும் அனைத்து அச்சிடும் பொருட்களுக்கும் அதன் தொடர்பாக, மற்றொரு நபருக்குச் சொந்தமான பொருட்களின் மீது எந்தவொரு நடத்தும்முறைகள் அல்லது செய்முறைகள் மூலம் வழங்கும் சேவைகள்.” | 6 | – |

(vii) இனம் (iii) –ல், அடைப்புக்குறிகள் மற்றும் இலக்கங்கள்‘‘மற்றும் (ii)’’என்ற வார்த்தைகளுக்கு பதிலாக இலக்கங்கள், அடைப்புகுறிகள், எழுத்துக்கள் மற்றும் வார்த்தை (ia), (ii) மற்றும் (iia) மாற்றீடு செய்யப்படுகிறது.

(i) வரிசை எண்.27–க்கு எதிராக, இனம் (i)–இல் நிரல்கள் (3), (4) மற்றும் (5)–ல் மற்றும் அதனுடைய தொடர்புடைய பதிவுகளுக்கு பதிலாக, பின்தொடரும் மாற்றீடு செய்யப்படுகிறது, அதாவது:–

| (3) | (4) | (5) |
|---|---|---|
| (i) மாசமசேவ 6 விழுக்காடு அல்லது 2 விழுக்காடு அல்லது ஏதமில்லைஈர்க்கும், அத்தியாயம் 48 அல்லது 49–இன் கீழ் வரும் அனைத்து அச்சிடும் பொருட்களுக்கும் (செய்தித்தாள்கள், புத்தகங்கள், (பிரெய்லி புத்தகங்கள்உள்ளடக்கியது) பத்திரிக்கைகள் மற்றும் பருவ இதழ்கள் உள்ளடக்கியது), இதற்கு உள்ளுரை மட்டுமே | 6 | – |

| | | |
|---|---|---|
| பதிப்பாளரால் வழங்கப்படும், வேறு இயற்பொருள் உள்ளீடுகள் மற்றும் அச்சிட பயன்படுத்தப்படும் காகிதம் ஆகியயைவைஅச்சிடுபவருக்கு சொந்தமானவை. | | |

(ii) பத்தி 2–இல், ''இனம் (i)–இல்'' என்ற வார்த்தை, அடைப்புக்குறி, மற்றும் இலக்கத்திற்கு பதிலாக ''இனம் (i), இனம் (iv)[உள்இனம் (ஆ) உள் இனம் (இ) மற்றும் உள் இனம் (ஈ)]இனம் (v) [உள்இனம் (ஆ), உள்இனம் (இ) மற்றும் உள்இனம் (ஈ), இனம் (vi) உள் இனம் (இ),]'' என்ற வார்த்தைகள், அடைப்பு குறிகள், இலக்கங்கள் மற்றும் எழுத்துக்கள் மாற்றீடு செய்யப்படுகிறது.

(iii) பத்தி 4–ல், உட்கூறு (viii) –க்கு பிறகு, பின்தொடரும் உட்கூறுகள் இடைச்சேர்க்கப் படுகிறது, அதாவது:–

''(IX)'' ''அரசாங்க அதிகாரி'' என்பது ஒரு அதிகாரரி அல்லது வாரியம் அல்லது வேறு எந்த அமைப்பும்–

(i) பாராளுமன்றம்அல்லது மாநில சட்டமன்ற சட்டத்தால்உருவாக்கப்பட்டது

(ii) ஏதாவது ஒரு அரசால் நிறுவப்பெற்ற

அரசமைப்பு பிரிவுக்கூறு 243 G –இன் கீழ் ஊராட்சிக்கும் அல்லது அரசமைப்பு பிரிவுக்கூறு 243 W–இன் கீழ் நகராட்சிக்கும் ஒப்படைக்கப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு, ஏதாவது அரசாங்கத்தால், 90 விழுக்காடு அல்லது அதற்கு மேல் பங்களிப்பு நேர்மைநெறி அல்லது கட்டுப்பாடு மூலமாக நிறுவப்பட்டது.

''(X)'' ''அரசு நிறுவனம்'' என்பது சங்கம், அறங்காவலர் குழு, மாநகராட்சி உள்ளடக்கிய ஒரு அதிகார அமைப்பு அல்லது ஒரு வாரியம் அல்லது வேறு ஏதாவது அமைப்பு,

(i) பாராளுமன்றம் அல்லது மாநில சட்டமன்ற சட்டத்தால் உருவாக்கப்பட்டது

(ii) ஏதாவது ஒரு அரசால் நிறுவப்பெற்ற

மத்திய அரசால், மாநில அரசால்,ஒருங்கிணைக்கப்பட்ட ஆட்சிப்பகுதியால் அல்லது ஒரு உள்ளூர் நிர்வாகத்தால், நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஒப்படைக்கப்பட்ட, ஏதாவது அரசாங்கத்தால், 90 விழுக்காடு அல்லது அதற்கு மேல் பங்களிப்பு நேர்மைநெறி அல்லது கட்டுப்பாடு மூலமாக நிறுவப்பட்டது.

*[அரசாணை நிலை எண். 130வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1) 13 அக்டோபர் 2017*

*புரட்டாசி 27 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண்.II(2)/ வவப/858(a-6)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின் , 2017 (தமிழ்நாடு சட்டம் 19/2017)–ன் பிரிவு–11–ன் உட்பிரிவு (1)–ஆம் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, குழுவின் பரிந்துரைகளின் படி தமிழ்நாடு ஆளுநரால், பொதுநலன் கருதி வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண். II (2)/ வவப/532 (டி–15) 2017, வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசு அசாதாரணஅரசிதழ் நாள்:29.06.2017–இல், பக்க எண். 119 முதல் 143 வரை பகுதி–II, பிரிவு– 2ல், பின்தொடரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகிறது.

**திருத்தங்கள்**

(i) அட்டவணையில்:–

(அ) வரிசை எண் 5, நிரல் (3) –இல் ''அரசாங்கத்துக்குரிய அதிகாரரி '' என்ற வார்த்தைகளுக்கு பதிலாக '' மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைக்கப்பட்ட ஆட்சிப்பகுதி, உள்ளூர் அதிகாரி அல்லது அரசாங்கத்துக்குரிய அதிகாரரி '' என மாற்றீடு செய்யப்படுகின்றது.

(ஆ) வரிசை எண் 9 ஆ மற்றும் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்படுகிறது. அதாவது:–

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| "9இ | அத்தியாயம் 99 | மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைக்கப்பட்ட ஆட்சிப்பகுதி, உள்ளூர் அதிகாரி அல்லது மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைக்கப்பட்ட ஆட்சிப்பகுதி, உள்ளூர் அதிகாரியால் குறிப்பிடப்பட்ட நபருக்குமத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைக்கப்பட்ட ஆட்சிப்பகுதி, உள்ளூர் அதிகாரியால் குறிப்பிடப்பட்ட ஒரு நபரால், மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைக்கப்பட்ட ஆட்சிப்பகுதி, உள்ளூர் அதிகாரி இடமிருந்து பெறப்படும் மறுபயனுக்கு எதிராக , மானியத்தொகைவடிவில் அரசாங்க நிறுவனத்தால் வழங்கப்படும் சேவைகள். | இல்லை | இல்லை" |

(இ) வரிசை எண் 21 மற்றும் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்படுகிறது. அதாவது:–

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| "21அ | தலைப்பு 9965 அல்லது தலைப்பு 9967 | பதிவுபெறாத தற்காலிக வரிவிதிப்புக்குட்பட்ட நபர்களை உள்ளடக்கிய பதிவு பெறாத நபர்களுக்கு சரக்கு போக்குவரத்து நிறுவனத்தால் வழங்கப்படும் சேவைகளானது, பின்தொடரும் பெறுபவர்கள் நீங்கலாக, அதாவது:–<br><br>(அ) தொழிற்சாலைகள் சட்டம், 1948 (மத்திய சட்டம் 63/1948)–இன் கீழ் பதிவு பெற்ற அல்லது ஆளுகையில் உள்ள எந்த ஒரு தொழிற்சாலை அல்லது<br><br>(ஆ) சங்கங்களின் பதிவு சட்டம், 1860 (மத்திய சட்டம் 21–1860) கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கம் அல்லது இந்தியாவின் எந்த ஒரு பகுதியில் குறிப்பிட்ட காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் சங்கம்அல்லது<br><br>(இ) அந்த நேரத்தில் நடைமுறையில் இருக்கும் எந்த ஒரு சட்டத்தின் கீழ் அல்லது அந்த சட்டத்தால் நிறுவப்பட்ட கூட்டுறவு சங்கம் அல்லது<br><br>(ஈ)குறிப்பிட்ட காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் சட்டத்தின் கீழ் அல்லது அந்த சட்டத்தால் நிறுவப்பட்ட பெருநிறுவனம்<br><br>(உ) எந்த ஒரு சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற அல்லது பதிவு பெறாத எந்த ஒரு கூட்டாண்மை நிறுவனம் தனிநபர்கள் சங்கம் உட்பட<br><br>(ஊ) மத்திய சரக்கு மற்றும் சேவை வரிகள் சட்டம் அல்லது ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரிகள் சட்டம் அல்லது மாநில சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் அல்லது ஒருங்கிணைக்கப் பட்ட ஆட்சி பகுதி சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தின் கீழ் பதிவுபெற்ற தற்காலிக வரிவிதிக்கத் தக்கநபர். | இல்லை | இல்லை" |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

(ஈ) வரிசை எண் 23 மற்றும் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்படுகிறது அதாவது:—

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| "23அ | தலைப்பு 9967 | வருடாந்திர தொகை செலுத்தி ஒரு பாலம் அல்லது ஒரு சாலை நுழைவிற்கான சேவை | இல்லை | இல்லை" |

(உ) வரிசை எண்.41, கலம் (3)—ள் பதிவுகளுக்கு, பின்தொடரும் பதிவுகள் மாற்றீடு செய்யப்படுகிறது, அதாவது:—

மாநில அரசின் தொழில் மேம்பாட்டு கழகம் அல்லது 50% அல்லது அதற்குமேல் உரிமை கொண்ட மத்திய, மாநில, ஒருங்கிணைக்கப் பட்ட ஆட்சி பகுதி,தொழிற்சாலைகள் அல்லது தொழிற்சாலை அல்லது நிதி விநியோகம் மேம்பாட்டு பகுதியில் உள்ளவர்கள் தொழிற்சாலைகளுக்கான மனைகள் அல்லது நிதி விநியோக தொழில் கட்டமைப்புக்கான மேம்பாட்டுக்கு மனைகள் மானியம் பெற்றுக்கொண்டு 30 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக குத்தகைக்கு விடும் சேவைக்கு செலுத்த வேண்டிய வெளிப்படையான தொகை (சந்தா, சலாமி, மதிப்பு, விலை, மேம்பாட்டு கட்டணம் அல்லது வேறு எந்த பெயரிலாவது சொல்லப்படுவது)

(ii) பத்தி 2—ல் உட்கூறு (zf) க்கு பதிலாக பின்தொடரும் மாற்றீடு செய்யப்படுகிறது, அதாவது:—

"(zf)" " அரசாங்க அதிகாரி" என்பதன் பொருள் அதிகாரம் அல்லது வாரியம் அல்லது இதர அமைப்பு

(i) பாராளுமன்ற சட்டம் அல்லது சட்ட மன்ற சட்டத்தால் உருவாக்கப்பட்டது அல்லது

(ii) ஏதாவது ஒரு அரசாங்கத்தால் அமைக்கப்பட்டது,

அரசமைப்பு பிரிவுக்கூறு 243 G –இன் கீழ் ஊராட்சிக்கும் அல்லது அரசமைப்பு பிரிவுக்கூறு 243 W—இன் கீழ் நகராட்சிக்கும் ஒப்படைக்கப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு, ஏதாவது அரசாங்கத்தால், 90 விழுக்காடு அல்லது அதற்கு மேல் பங்களிப்பு நேர்மைநெறி அல்லது கட்டுப்பாடு மூலமாக நிறுவப்பட்டது.

"(zfa)" "அரசாங்க நிறுவனம் " என்பது நிறுவனம் அல்லது வாரியம் அல்லது ஏதாவது ஒரு அமைப்பு, சங்கம், அறக்கட்டளை, கழகம் உட்பட

(i) பாராளுமன்ற சட்டம் அல்லது சட்ட மன்ற சட்டத்தால் உருவாக்கப்பட்டது அல்லது

(ii) எந்த ஒரு மாநில அரசால் அமைக்கப்பட்டது

மத்திய அரசால், மாநில அரசால், ஒருங்கிணைக்கப்பட்ட ஆட்சிப்பகுதியால் அல்லது ஒரு உள்ளூர் நிர்வாகத்தால், நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஒப்படைக்கப்பட்ட, ஏதாவது அரசாங்கத்தால், 90 விழுக்காடு அல்லது அதற்கு மேல் பங்களிப்பு நேர்மைநெறி அல்லது கட்டுப்பாடு மூலமாக நிறுவப்பட்டது.

*[அரசாணை நிலை எண்.* 131 *வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1) 13 அக்டோபர் 2017*

*புரட்டாசி 27 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண்.II(2)/ வவப/858(a-7)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 19/2017)—ன் 9—ஆம் பிரிவின் (3)—ஆம் உட்பிரிவில் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, குழுவின் பரிந்துறைகளின் படி தமிழக ஆளுநரால், தமிழ்நாடு வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறையின் அறிவிக்கை

எண்.No.II(2)/வவப/532(d-16)/2017, வெளியிடப்பட்டதமிழ்நாடு அரசு அசாதாரண அரசிதழ், நாள்:29.06.2017—இல் பக்க எண். 143 முதல் 146 வரை இரண்டாம் பாகம் – பிரிவு 2, பின்தொடரும் திருத்தங்கள் செய்யப்படுகிறது. அதாவது:—

## திருத்தம்

கூறப்பட்ட அறிவிக்கையில் :—

(i)அட்டவணையில் வரிசை எண் 9 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுககளுக்கு பிறகு, பின்தொடரும் வரிசை எண் மற்றும் அதன் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:—

| | | | |
|---|---|---|---|
| 10 | இந்திய ரிசர்வ் வங்கிக்கு மேற்பார்வை குழு உறுப்பினர்களால் வழங்கப் பட்டசேவைகள் | இந்திய ரிசர்வ் வங்கியால் அமைக்கப்பட்ட மேற்பார்வை குழு உறுப்பினர்கள் | இந்தியன் ரிசர்வ் வங்கி |

*[அரசாணை நிலை எண். 132 வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1) 13 அக்டோபர் 2017*

*புரட்டாசி 27 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண்.II(2)/ வவப/858(a-8)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 19/2017)—ன் 9—ஆம் பிரிவின் (1)—ஆம் உட்பிரிவில் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, குழுவின் பரிந்துறைகளின் படி தமிழக ஆளுநரால், தமிழ்நாடு வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண்.No.II(2)/வவப/532(d-4)/2017,வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசு அசாதாரணஅரசிதழ், நாள்:29.06.2017பக்க எண். 3 முதல் 68 வரை, இரண்டாம் பாகம் – பிரிவு 2, —இல் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகிறது. அதாவது:—

## திருத்தங்கள்

கூறப்பட்ட அறிவிக்கையில் :—

**(அ) அட்டவணை –I –2.5%, இல்—**

(i) வரிசை எண். 29, இல் கலம் (2) உள்ள பதிவுகளுக்கு பதில், பதிவு, 0802, 0813, மாற்றீடு செய்யப்பட வேண்டும்.

(ii) வரிசை எண்.30 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:—

| | | |
|---|---|---|
| 30 A | 0804 | துண்டாக்கப்பட்ட உலர்ந்த மாம்பழங்கள் |

(iii) வரிசை எண். 99 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:—

| | | |
|---|---|---|
| "99A | 1905 அல்லது 2106 | காக்ரா, சாதாரண சப்பாத்தி அல்லது ரொட்டி |

(iv) வரிசை எண். 101 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்குப்பின், பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:—

| | | |
|---|---|---|
| "101A | 2106/90 | நம்கீன்ஸ், புஜ்யா, மிக்சர், சபேனா மற்றும் அதுபோன்ற |

| | | |
|---|---|---|
| | | உட்கொள்ள தயார் நிலையில் உள்ள சமையல் தயாரிப்புகள், அலகு கொள்கலன்களில் அடைக்கப்பட்டவைகள் தவிர, மற்றும்,<br>(அ) பதிவு செய்யப்பட்ட வணிகச்சின்னம் பெற்ற; அல்லது<br>(ஆ) வழக்குத் தொடர்வதற்குரிய கோரிக்கையினை அல்லது நீதிமன்றத்தில் செயல்படுத்தக்கூடிய உரிமையுடைய ஒரு வணிகச்சின்னம் [இணைப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, அத்தகைய வணிகச்சின்னத்தைப் பொறுத்தவரை வழக்குத் தெடர்வதற்குரிய கோரிக்கையை அல்லது நீதிமன்றத்தில் செயல்படுத்தக்கூடிய உரிமையை தாமாக துறந்தவைகள் தவிர]'' |

(v) வரிசை எண். 164–இல், நிரல் (3)–ல் உள்ள பதிவுகளுக்கு பதிலாக, பதிவு

(அ) மண்ணெண்ணெய் பொதுவிநியோக முறை

(ஆ) கப்பல்களின் பயன்பாட்டிற்கான பின்வரும் பதுங்குக்குழி எரிபொருள்கள்,

அதாவது,

(i) IFO 180 CST

(ii) IFO 380 CST, மாற்றீடு செய்ய வேண்டும்.

(vi) வரிசை எண்.181 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| 181A | 30 | குணப்படுத்துகின்றவை (ஆயுர்வேதா, யுனானி, சித்தா, ஹோமியோபதி அல்லது உயிர்வேதியல் முறை), 1940–ஆம் ஆண்டின் மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தின் (23/1940) முதல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரபூர்வமான புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ள சூத்திரங்களுக்கிணங்க பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது இந்தியாவின்ஹோமியோபதி மருந்தின் குணங்கள், அல்லது அமெரிக்க ஐக்கிய நாடுகள் அல்லது ஐக்கிய நாடுகள் அல்லது ஜெர்மன் ஹோமியோபதி மருந்துகளின் குணங்கள், செய்முறை விளக்க நூல் அல்லது , நேர்வுக்கேற்ப, அத்தகைய புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட பெயரில் விற்கப்படுவது. |

(vii) வரிசை எண். 187 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| 187 A | 3915 | நெகிழியின் கழிவுகள், கழிவுத் துணுக்குகள் அல்லது செப்பனிடுதல் |

(viii) வரிசை எண். 188 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| 188 A | 4004 00 00 | ரப்பர் கழிவுகள், கழிவுத்துணுக்கு அல்லது உரிப் பொருள் (கடின ரப்பர் நீங்கலாக) |

(ix) வரிசை எண். 191 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:—

| | | |
|---|---|---|
| 191 A | 4017 | கடின ரப்பர் கழிவுகள் அல்லது கழிவுத்துணுக்கு |

(x) வரிசை எண். 198A மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:—

| | | |
|---|---|---|
| 198 B | 4707 | காகித துணுக்குகள் அல்லது காகித அட்டையின் கழிவு அல்லது காகித கழிவுப் பொருட்களிலிருந்து மீட்கப்பட்டது. |

(xi) வரிசை எண். 201A மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகள் நீக்கப்படுகிறது ;

(xii) வரிசை எண். 218 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:—

| | | |
|---|---|---|
| 218 A | 5605 0010 | உண்மையான ஜரி நூல் (தங்கம்) மற்றும் வெள்ளி நூல், ஜவுளி நூலுடன் இணைந்தது; |

(xiii) வரிசை எண். 219, கலம் (2)—ல், இலக்கம், "5705" க்கு பதிலாக, இலக்கம், "5702, 5703, 5705" ஆகியவை மாற்றீடு செய்யப்பட வேண்டும்.

(xiv) வரிசை எண். 228 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:—

| | | |
|---|---|---|
| 228 A | 7001 | கண்ணாடியின் கழிவுத்துணுக்குகள் அல்லது இதர கழிவுகள் அல்லது உடைசல் கண்ணாடிகள் |

(xv) வரிசை எண். 234 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:—

| | | |
|---|---|---|
| 234 A | 84 அல்லது 85 | மின்— கழிவுகள்<br>**விளக்கம்:** இந்த பதிவின் நோக்கத்திற்காக, மின்—கழிவு என்பது மின்சாரம் மற்றும் மின்னணு இந்திய அரசிதழில் GSR—338E நாள்: 23/03/2016 மூலம் வெளியிடப்பட்ட 2016ஆம் ஆண்டு மின்—கழிவு (நிர்வாகம்) விதிகள், அட்டவணை —I ல் பட்டியலுக்குட்பட்ட மின்சாரம் மற்றும் மின்னணு சாதனங்களை குறிக்கும், இதில் இந்த சாதனங்களை இயங்க வைக்கும் கூறுகள், நுகர்பொருள்கள், பாகங்கள் மற்றும் உதிரி பாகங்களும் உள்ளடங்கும். |

(xvi) வரிசை எண். 263A மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:—

| | | |
|---|---|---|
| "264 | ஏந்த அத்தியாயத்திலும் | உயிரினத் தொகுதி கட்டிகள்" |

**(B) அட்டவணை –II – 6% –இல்**

(i) வரிசை எண். 16–இல், கலம் (3)–இல் பேரிச்சைப்பழம் (மிருதுவானது அல்லது கடினமானது) அத்திப்பழம், அன்னாச்சிப்பழம், வெண்ணைப்பழம், கொய்யாப்பழம், மாம்பழம் மற்றும் மங்குஸ்தானி உலர்ந்தது, என்ற வார்த்தைகள்மற்றும் அடைப்புக் குறிகளுக்கு பதிலாக, பேரிச்சப்பழம் (மிருதுவானது அல்லது கடினமானது), அத்திப்பழம், அன்னாச்சிப்பழம், வெண்ணெய்பழம், கொய்யாப்பழம் மற்றும் மங்குஸ்தான், உலர்ந்தது என்ற வார்த்தைகள் மற்றும் அடைப்புக் குறிகள், மாற்றீடு செய்ய வேண்டும்.

(ii) வரிசை எண் 17, கலம் (3)–இல் ''அத்தியாயம் 8–லிலுள்ளஉலர்ந்த பழங்கள் (புளி, உலர்ந்தது தவிர) என்ற வார்த்தைகள் இலக்கம் மற்றும் அடைப்புக்குறிகளுக்கு பதிலாக, ''அத்தியாயம் 8–லிலுள்ள உலர்ந்த பழங்கள்(உலர்ந்த புளி மற்றும் உலர்ந்த கஷ்கொட்டை(சிவகாதா) மேல் ஓடு அல்லது தோல் நீக்கியது அல்லது நீக்காதது என்ற வார்த்தைகள், இலக்கம் மற்றும் அடைப்புக்குறிகள், மாற்றீடு செய்யப்பட வேண்டும்.

(iii) வரிசை எண் 46–இல், கலம் (3)–லிலுள்ள பதிவுகளுக்கு பதிலாக, பின்வரும் உள்ளீடுகள் மாற்றீடு செய்யப்பட வேண்டும், அவை:–

''நம்கின்ஸ், புஜ்ஜியா, மிக்ஸ், சபேனா மற்றம் உட்கொள்கின்ற நிலையில் தயாராக உள்ள அதே போன்ற சமையல் தயாரிப்புகள் அலகு கொள்கலனில் அடைக்கப்பட்டது (வறுத்த பருப்பு வகை தவிர) மற்றும்,

(அ) பதிவு பெற்ற வணிகச்சின்னம் இருக்கின்ற அல்லது

(ஆ) வழக்குத் தொடர்வதற்குரிய கோரிக்கையுள்ள அல்லது நீதிமன்றத்தில் செயல்படுத்தக்கூடிய உரிமையுள்ள ஒரு வணிகச்சின்னம் (இணைப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அத்தகைய வணிகச்சின்னத்தைப் பொருத்தவரை வழக்குத் தொடர்வதற்குரிய கோரிக்கையை அல்லது நீதிமன்றத்தில் செயல்படுத்தக்கூடிய உரிமையை தாமாக துறந்தவைகள் தவிர) ''

(iv) வரிசை எண், 111 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகள் நீக்கப்படுகிறது.

(v) வரிசை எண். 132 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| 132 A | 5401 | மனிதனால் செய்யப்பட்ட நாரிழைகளிலுள்ள தையல் நூல், சில்லரை வணிகம் மேற்கொண்டாலும் அல்லது இல்லையென்றாலும் |
| 132B | 5402, 5403, 5404, 5405, 5406 | செயற்கை அல்லது இரசாயண இழை நூல் |
| 132C | 5508 | மனிதர்களால் செய்யப்பட்ட பிரதான இழைகளாலான தையல் நூல் |
| 132D | 5509, 5510, 5511 | மனிதனால்செய்யப்பட்ட பிரதான இழைகளாலான நூல் |

(vi) வரிசை எண் 137–இல் , நிரல் (3)–லிலுள்ள உள்ளீடு ''வார்த்தைகள் மற்றும் இலக்கங்கள்'' அதாவது உண்மையான ஜரிகை நூல் (தங்கம்) மற்றும் வெள்ளி நூல், ஜவுளி நூாலுடன் இணைந்த நூல், நீக்கப்படுகிறது.

**(C) அட்டவணை –III – 9%**

(i) வரிசை எண், 16–இல் நிரல் (3)–இல், ‘‘பீஸ்ஸா ரொட்டி நீங்கலாக’’ என்ற வார்த்தைக்கு பதிலாக பீஸ்ஸா ரொட்டி, காக்ரா, சாதாரண சப்பாத்தி அல்லது ரொட்டி, என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்படுகிறது.

(ii) வரிசை எண், 23–இல், நிரல் 3)–இல், ‘‘உட்கொள்ள தயார் நிலையிலுள்ள தயாரிப்புகள் ’’ என்ற வாாத்தைகளுக்கு பதிலாக ‘‘உள்கொள்ள தயார் நிலையில் உள்ளகாக்ரா ’’ என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்படுகிறது.

(iii) வரிசை எண்.54 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| 54A | 3213 | சுவரொட்டி வண்ணம் |

(iv) வரிசை எண்.63–இல் நிரல்(3)–இல் உள்ள பதிவுகளுக்கு பதிலாக, குழந்தைகளின் பொழுதுபோக்கிற்கு பயன்படுத்தக்கூடியவைகளையும் உள்ளடக்கிய, உருப்படிவத்தின் பசைகள், ‘‘பல் மெழுகு’’ என்றழைக்கப்படும். தயாரிப்புகள் அல்லது பல் தோற்ற கலவைகள் ‘‘தொகுப்பாக வைக்கப்பட்டு, சில்லரை வணிகத்திற்கு அடைப்புகளில் அல்லது தகடுகளில் வைக்கப்பட்டு குதிரை லாடம் வடிவங்கள், குச்சிகள் மற்றும் அதுபோன்ற வடிவங்கள், பல் மருத்துவத்திற்கு பயன்படும் தயாரிப்புகள் சாந்தின் அடிப்படையை கொண்ட (கேல்சைன் ஜிப்சம்மின் அல்லது கால்சியம் சல்பேட்டின்)’’ உள்ளீடுகள் மாற்றீடு செய்யப்படுகிறது.

(v) வரிசை எண். 102 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகள் நீக்கப்படுகிறது.

(vi) வரிசை எண்114–இல், நிரல் (3)–ல்,

‘‘ரப்பர் கழிவுகள், ரப்பர் கழிவு பொருள்கள் அல்லது உரிப்பொருள் (கடின ரப்பர் நீங்கலாக) மற்றும் அதனிலிருந்து பெறப்படும் தூள் அல்லது துகல்கள்’’ என்ற வார்த்தைகள் மற்றும் அடைப்பு குறிகளுக்கு பதிலாக, ‘‘ரப்பர் கழிவு துணுக்குகள் அல்லது உரிப்பொருள்கள், கழிவு ஆகியவைளிலிருந்து பெறப்பட்ட தூள் அல்லது துகள்கள் (கடின ரப்பர் நீங்கலாக)’’ என்ற வார்த்தைகள் மற்றும் அடைப்புக்குறிகள் மாற்றீடு செய்யப்படுகிறது.

(vii) வரிசை எண். 158 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகள் நீக்கப்படுகிறது.

(viii) வரிசை எண். 159–இல் நிரல் (3)–இல் உள்ள பதிவுகளுக்கு பதிலாக, உள்ளீடு ‘‘இராசாயன கலவையிலான இழை நூல் நீங்கலாக அனைத்து சரக்குகளும்’’ என்று மாற்றீடு செய்யப்படுகிறது.

(ix) வரிசை எண். 160–இல் நிரல் (3)–இல் உள்ள பதிவுகளுக்கு பதிலாக, உள்ளீடு ‘‘செயற்கை இழை நூல்’’ மாற்றீடு செய்யப்படுகிறது.

(x) வரிசை எண். 164 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகள் நீக்கப்படுகிறது.

(xi) வரிசை எண். 165 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகள் நீக்கப்படுகிறது.

(xii) வரிசை எண். 177 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| 177A | 6802 | அனைத்து சரக்குகளும், பின்வருவன நீங்கலாக<br>(i) சலவைக்கல் மற்றும் கருங்கற்களாலான அனைத்து சரக்குகளும்,<br>(ii) சிலைகள், சிறுபடிம சிலைகள், பீடங்கள், உயரமான அல்லது தாழ்வான சுமைத்தணவு, சிலுவைகள், மிருகங்களின் வடிவங்கள் கிண்ணங்கள், குடவை, கோப்பை, கச்சவ்பெட்டிகள், சாம்பல் தட்டு, தாள் எடை, எழுதும் பொருள்கள் தொகுப்பு, செயற்கை பழங்கள் மற்றும் பசுமைகள் முதலியன, கற்களினால் ஆன மற்ற அலங்கார பொருட்கள். |

(xiii) வரிசை எண். 188 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகள் நீக்கப்படுகிறது.

(xiv) வரிசை எண். 303 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| 303A | 8305 | உலோக அடிப்படையிலான கட்டற்ற பிணை காரணிகள்அல்லது கோப்புகள் கடித கவ்விகள், கடித மூலைகள், காகித கவ்விகள், குறியீட்டு குறிச்சொல் மற்றும் அதுபோன்ற அலுவலக பண்டங்கள் |

| | | |
|---|---|---|
| | | உலோக அடிப்படையிலான தாள்களை இணைக்கும் கருவி கீற்று. (உதாரணமாக, அலுவலகங்களுக்கு மெத்தைகள், திரைச்சிலைகள், மேசை நாற்காலி முதலியவற்றின் விரிப்புகளின் ஓட்டு மொத்தம்.) |

(xv) வரிசை எண். 308 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:—

| | | |
|---|---|---|
| 308A | 84 | 15 குதிரை திறனுக்கு மிகாத விரைவு டீசல் பொறிக்கு தேவையான தனிப்பாகங்கள் அல்லது சிறப்புப்பாகங்கள் |
| 308B | 84 or 85 | தண்ணீரை முதன்மையாக கையாள வடிவமைக்கப் பட்டமின்சாரத்தால் இயங்கக்கூடிய பம்ப்பிற்க்கு முழுமையாக அல்லது பிரதானமாக பொருந்தக் கூடிய தனிப்பாகங்கள் அல்லது சிறப்புப்பாகங்கள், அவைகள் மையவிலக்கு பம்ப்பு, (கிடைநிலை மற்றும் செங்குத்து நிலை), ஆழ்குழாய் கிணறு சுழலி பம்ப்பு, மூழ்க கூடிய பம்ப்பு, அச்சு ஓட்டம் மற்றும் கலப்பு ஓட்டம் செங்குத்து பம்ப்பு |

(xvi) வரிசை எண். 369 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:—

| | | |
|---|---|---|
| 369A | 8483 | சமமான தண்டு தாங்கு உருளைகள். |

<u>(D) அட்டவணை –IV – 14%</u>

(i) வரிசை எண், 23—இல் நிரல் (3)—இல், ‘‘உலோகத் தட்டு அல்லது அதுபோன்ற வடிவங்கள் அமைப்பில் அல்லது கட்டப்பட்டது’’ என்ற வார்த்தைகளுக்கு பதிலாக ‘‘உலோகத் தட்டு அல்லது அதுபோன்ற அமைப்பில் அல்லது கட்டப்பட்டது (சுவரொட்டி வண்ணம் நீங்களாக)’’ என்ற வார்த்தைகள் மற்றும் அடைப்புக்குறிகள் மாற்றீடு செய்யப்படுகிறது.

(ii) வரிசை எண். 34 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகள் நீக்கப்படுகிறது.

(iii) வரிசை எண்.50—இல் நிரல் (3)—ல் ‘‘கழிவு மற்றும் கழிவுப் துணுக்குகள் உள்ளடக்கியது’’ என்ற வார்த்தைகளுக்கு பதிலாக ‘‘கழிவு மற்றும் கழிவுப் துணுக்குகள் நீங்களாக’’ என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்படுகிறது.

(iv) வரிசை எண்.70—இல் நிரல் (3)—ல் உள்ள பதிவுகளுக்கு பதிலாக, பின்வரும் பதிவுகள் மாற்றீடு செய்யப்படுகிறது. அவை:—

‘‘சலவைக்கல் அல்லது கருங்கள்கலாலான அனைத்து சரக்குகள் (சிலைகள், சிறுபடிமங்கள், பீடங்கள், உயரமான அல்லது தாழ்வான சுமைத்தணவு, சிலுவைகள், மிருகங்களின் வடிவங்கள், கிண்ணங்கள், குடுவை, கோப்பை, கச்சவ், பெட்டிகள், எழுதும் பொருட்கள், சாம்பல் கலன்கள், தாள் எடை, செயற்கை பழங்கள் மற்றும் பசுமைகள் முதலியன, கற்களை அடிப்டையாக கொண்ட அலங்கார பொருட்கள்)’’

(v) வரிசை எண்.112 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகள் நீக்கப்படுகிறது.

(vi) வரிசை எண்.135— இல், கலம் (3)—ல் வார்த்தைகள் ‘‘மற்றும் சமமான தண்டு தாங்கு உருளைகள்’’ நீக்கப்படுகிறது.

**(E)** இணைப்பில், (b) குறிப்பிற்கு பிறகு, பின்தொடரும் நிபந்தனை இடைச்சேர்க்கப்படுகிறது, அவை:

நிபந்தனையின் பேரில், வழக்குத் தொடர்வதற்குரிய கோரிக்கையுள்ள அல்லது நீதிமன்றத்தில் செயல்படுத்தக்கூடிய உரிமையுள்ள ஒரு வணிகச்சின்னம் கொண்டுள்ள நபரும் மற்றும் அவ்வாறான சரக்கினை அலகு கொள்கலனில் அடைக்கும் பணியினை மேற்கொள்ளும் நபரும் இரு வேறு நபராக இருந்தால், வழக்குத் தொடர்வதற்குரிய கோரிக்கையுள்ள அல்லது நீதிமன்றத்தில் செயல்படுத்தக்கூடிய உரிமையுள்ள ஒரு வணிகச்சின்னம் கொண்டுள்ள நபர், விளக்கம் (ii) (அ)–இல் விவரிக்கப்பட்டுள்ளவாறு அத்தகைய வணிகச்சின்னத்தை வழக்குத் தொடர்வதற்குரிய கோரிக்கையை அல்லது நீதிமன்றத்தில் செயல்படுத்தக்கூடிய உரிமையை தாமாக துறக்கிறார் என்பதற்கான வாக்குமூலத்தை அத்தகைய சரக்கினை அடைக்கும் பணியினை மேற்கொள்ளும் நபரின் அதிகார எல்லைக்குட்பட்ட மாநில வரி ஆணையருக்கு தாக்கல் செய்ய வேண்டும், மற்றும் அந்நபருக்கு (சொல்லப்பட்ட வணிகச்சின்னம் தாங்கும் அலகு கொள்கலனில் சரக்குகளை அடைக்கும் பணியினை மேற்கொள்பவர்) அந்த அலகு கொள்கலனில், அழியாத மையில் ஆங்கிலத்திலும் மற்றும் உள்ளூர் மொழியிலும் அவ்வாறான வணிகச்சின்னம் அவர் (வணிகச்சின்னம் வைத்திருக்கும் நபர்) வழக்குத் தொடர்வதற்குரிய கோரிக்கையை அல்லது நீதிமன்றத்தில் செயல்படுத்தக்கூடிய உரிமையை துறந்திருக்கிறார் என்பதை அச்சடிக்க அதிகாரமளித்திருக்க வேண்டும்.

[அரசாணை நிலை எண். 133 *வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1) 13 அக்டோபர் 2017*

*புரட்டாசி 27 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048*]

**எண்.II(2)/ வவப/858(a-9)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 19/2017)–ன் 11–ஆம் பிரிவின் 1–ஆம் உட்பிரிவில் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, குழுவின் பரிந்துறைகளின்படி தமிழக ஆளுநரால் வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிப்பு எண். II (2)/ வணிகவரிகள் (ம) பதிவுத்துறை/532 (டி–5) 2017, பக்க எண்.68–75 இரண்டாம் பாகம் – பிரிவு 2, தமிழ்நாடு அரசு அசாதாரணமான அரசிதழ், நாள்:29.06.2017–இல் பின்தொடரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகிறது.

## திருத்தங்கள்

கூறப்பட்ட அறிவிக்கையில்:–

**(அ) அட்டவணையில் உள்ள**:–

வரிசை எண்.122 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| 122அ | 4907 | தீர்வை வரவு பங்குகள் |

(II) வரிசை எண் 149 மற்றும் அதன் தொடர்புடைய உள்ளீடுகளுக்குப் பிறகு பின்வரும் வரிசை எண் மற்றும் உள்ளீடுகளை புகுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| 150 | – | மத்திய அரசு, மாநில அரசு,ஒருங்கிணைக்கப் பட்ட ஆட்சிப்பகுதி, உள்ளூர் அதிகாரி அல்லது மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைக்கப் பட்ட ஆட்சிப்பகுதி, உள்ளூர் அதிகாரியால், மறுபயனுக்காக மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைக்கப் பட்ட ஆட்சிப்பகுதி, உள்ளூர் அதிகாரி அல்லது மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைக்கப் பட்ட ஆட்சிப்பகுதி, உள்ளூர் அதிகாரியால் குறிப்பிட்டப்பட்ட நபருக்கு மானியம் மூலம் வழங்கப்படும் சரக்குகள். |

(ஆ) விளக்கவுரையில்– உட்கூறு (IV) க்கு பிறகு பின்வரும் உட்கூறு இடைச்சேர்க்கப் படவேண்டும், அதாவது

(V) சொற்றொடர் ‘‘அரசாங்க நிறுவனம்’’ என்பது ஒரு அதிகாரி அல்லது வாரியம் அல்லது சங்கம், அறக்கட்டளை, மாநகராட்சிபோன்ற அமைப்பு, எவை என்றால்

(அ) பாராளுமன்றம் அல்லது சட்ட மன்ற சட்டப்படி உருவாக்கப்பட்டது.

(ஆ) மத்திய அரசால், மாநில அரசால், ஒருங்கிணைக்கப்பட்ட ஆட்சிப்பகுதியால் அல்லது ஒரு உள்ளூர் நிர்வாகத்தால், நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஒப்படைக்கப்பட்ட, ஏதாவது அரசாங்கத்தால், 90 விழுக்காடு அல்லது அதற்கு மேல் பங்களிப்பு நேர்மைநெறி அல்லது கட்டுப்பாடு மூலமாக நிறுவப்பட்டது.

(இ) இணைப்பு 1–இல் ‘‘ஆ’’–குறிப்புக்கு பிறகு பின்தொடரும் நிபந்தனைகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

ஏதாவது ஒரு நபர் ஒரு பொருளுக்கான வணிகச்சின்னத்திற்க்கான வழக்கு உரிமையுள்ளவராகவோ, செயல்படுத்தும் அதிகாரம் பெற்றவராகவோ இருந்தாலும், அவர் அந்த பொருளை தனியான கொள்கலனில் அடைத்து தருபவராக இருந்தால் அவர் இரு நபராக கருதப்படுவார். அவ்வாறான சமயத்தில் வணிகச் சின்னத்திற்க்கான வழக்கு உரிமையுள்ளவரோ, செயல்படுத்தும் அதிகாரம் பெற்றவரோ தானே சுயமாக முன்வந்து தனக்குண்டான வணிகச்சின்னத்திற்க்கான வழக்கு உரிமை, செயல்படுத்தும் அதிகாரத்தை இழப்பதாக எழுத்து மூலமான வாக்கு மூலத்தை, பொருட்களை கொள்கலனில் அடைத்து தரும் நபர் – மாநில வரிக்கான செயல் எல்லைக்குட்பட்ட ஆணையருக்கு விளக்கம் (II)(அ)–இல் கூறப்பட்டதுபோல் சமர்ப்பிக்க வேண்டும். மற்றும் அடைத்து விற்கப்படும் கொள்கலனில் அழியாத மையில் ஆங்கிலம் மற்றும் உள்ளூர் மொழியில் (வணிகச்சின்னத்திற்க்கு உரிமையுள்ள நபர்) வணிகச் சின்னத்திற்க்கான வழக்கு உரிமை மற்றும் செயல்படுத்தும் உரிமை தானாக முன்வந்து இழப்பதாக அச்சிடவேண்டும்.’’

[அரசாணை நிலை எண். 134 *வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1) 13 அக்டோபர் 2017 புரட்டாசி 27 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048*]

**எண்.II(2)/ வவப/858(a-10)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 19/2017)–ன் 9–ஆம் பிரிவின் 3–ஆம் உட்பிரிவில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைபடுத்தி, குழுவின் பரிந்துறைகளின் படி தமிழக ஆளுநரால்‘, வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிப்பு எண். II (2)/ வணிகவரிகள் (ம) பதிவுத்துறை/532 (டி–17) 2017, பக்க எண்.80–81, –ல் இரண்டாம் பாகம் – பிரிவு 2, தமிழ்நாடு அரசு அசாதாரண அரசிதழ், நாள்:29.06.2017–இல் பின்தொடரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகிறது. அதாவது:–

## திருத்தம்

கூறப்பட்ட அறிவிப்பில்–
(i) வரிசை எண்.5 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகளை இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

அட்டவணை

| வரிசை எண் | கட்டண வீதப் பட்டியல், துணைதலைப்பு, தலைப்பு, அத்தியாயம் | சரக்குகள் வழங்கல்களின் விவரிப்பு | சரக்குகளை வழங்குபவர் | வழங்கலைப் பெறுபவர் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 6 | எந்த அத்தியாயத்திலும் | பயன்படுத்திய வாகனங்கள், கைப்பற்றப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள், பழைய மற்றும் பயன்படுத்திய பொருட்கள், | மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைக்கப் பட்ட ஆட்சிப்பகுதி | ஏதாவது பதிவுப்பெற்ற நபர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பயன்படாதவை மற்றும் கழிவுகள் | அல்லது உள்ளூர் அதிகாரி | |

*[அரசாணை நிலை எண். 135 வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1) 13 அக்டோபர் 2017 புரட்டாசி 27 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண்.II(2)/வவப/858(a-11)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 19.2017)–இன், 9–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் அளிக்கப்பட்ட அதிகாரங்களைப் நடைமுறைப்படுத்தி, தமிழ்நாட்டின் ஆளுநரால், குழுவின் பரிந்துரைகளின் படி, சரக்குகளின் உள் மாநில வழங்குதலுக்கான மாநில வரியினை, அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் நிரல் (3)–ல் குறிப்பிட்டவாறு சுங்க வரி கட்டண வீதப் பட்டியல் சட்டம், 1975 (மையச் சட்டம் 51 /1975)–ன் முதல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டண வீதப் பட்டியல், துணை தலைப்பு, தலைப்பு அல்லது அத்தியாயம் ஆகியவற்றின் கீழ்வரும் நேர்வுக்கேற்ப, கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் நிரல் (2)–ல் ஒத்திசைவான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு, நிரல் (4)–ன் ஒத்திசைவான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரி விகிதம் என்றும் மற்றும் மேலே சொல்லப்பட்ட அட்டவணையில் நிரல் (5)–லிலுள்ள ஒத்திசைவான பதிவுகளில் குறிப்பிட்டுள்ள இந்த அறிவிக்கையின் இணைப்பிலுள்ள உரிய நிபந்தனைகள், ஏதேனும் இருப்பின் அதற்குட்பட்டது என்று இதன்மூலம் அறிவிக்கை செய்கிறார்.

<u>அட்டவணை</u>

| வ.எண் | அத்தியாயம், தலைப்பு, துணை தலைப்பு அல்லது கட்டண வீதப் பட்டியல், வகை | சரக்குகளின் விவரிப்பு | விழுக்காடு | நிபந்தனை எண். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | 87 | மோட்டார் வாகனங்கள் | பொருந்தக்கூடிய மாநில வரியில் 65% இல்லையெனில் தமிழ்நாடு அரசிதழ் அசாதாரணமானது நாள்:29.06.2017–ல், பிரிவு –2, பகுதி–II–ல் பக்கம்–3–68–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண், II/(2) / CTR / 532(d–4) / 2017–ன் கீழ் அச்சரக்கில் மற்றபடி பொருந்தக்கூடிய மாநில வரியில் 65%. | 1 |
| 2. | 87 | மோட்டார் வாகனங்கள் | பொருந்தக்கூடிய மாநில வரியில் 65% இல்லையெனில் தமிழ்நாடு அரசிதழ் அசாதாரணமானது நாள்:29.06.2017–ல், பிரிவு –2, பகுதி–II–ல் பக்கம்–3–68–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண், II/(2) / CTR / 532(d–4) / 2017–ன் கீழ் அச்சரக்கில் மற்றபடி பொருந்தக்கூடிய மாநில வரியில் 65%. | 2 |

2. இருப்பினும், இந்த அறிவிக்கையில் உள்ளடக்கிய எதுவும் 01.07.2020 அன்றோ அதற்கு பிறகோ செயல்படுத்த முடியாது.

**விளக்கம்:–** இந்த அறிவிக்கையின் நோக்கத்திற்காக,

(i) இந்த அறிவிக்கையில் ‘‘கட்டண வீதம்’’, ‘‘துணை தலைப்பு’’, ‘‘தலைப்பு’’ மற்றும் ‘‘அத்தியாயம்’’ ஆகியவை சுங்க வரி வீதப் பட்டியல் சட்டம் 1975 (மையச் சட்டம் 51 /1975) –இல் முதல் அட்டவணையில்

குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒரு கட்டணப்பட்டியல் வகை, தலைப்பு, துணை தலைப்பு மற்றும் அத்தியாயம் ஆகியவைகளை முறையே குறிக்கும்.

(ii) சுங்க வரி கட்டண வீதப் பட்டியல் சட்டம், 1975–இன் முதல் அட்டவணையில் பொருள் விவரிப்பதற்கானவிதிகள், முதல் அட்டவணையின் பிரிவு மற்றும் அத்தியாய குறிப்புகள் மற்றும் பொது விளக்க குறிப்புகள் ஆகியவைகள், இந்த அறிவிக்கையின் பொருள் விளக்கக்கூடிய வரை பொருந்தும்.

## இணைப்பு

| நிபந்தனை எண். | நிபந்தனை |
|---|---|
| 1. | மோட்டார் வாகனங்கள் குத்தகை விடுபவரால் 2017 ஜுலை1–க்கு முன்பு வாங்கி 2017 ஜுலை1 –க்கு முன்பு குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். |
| 2. | (i) மோட்டார் வாகனங்கள் வழங்குபவர் ஒரு பதிவு பெற்ற நபர்.<br>(ii) மோட்டார் வாகனத்தை வழங்குபவர் 2017 ஜுலை1–க்கு முன்பு வாங்கி அவ்வாகனத்தின் மீது செலுத்தப்பட்ட மத்திய கலால் வரி, மதிப்பு கூட்டு வரி அல்லது வேறு ஏதாவது வரியினை உள்ளீட்டு வரி வரவாக துய்க்காமல் இருக்க வேண்டும். |

[அரசாணை நிலை எண். 136 *வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1) 13 அக்டோபர் 2017*

*புரட்டாசி 27 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண்.II(2)/ வவப/858(a-12)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 19/2017)–ன் 11–ஆம் பிரிவின் 1–ஆம் உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி சரக்கு மற்றும் சேவை வரி குழுவின் பரிந்துறையின் பேரில் தமிழக ஆளுநர் அவர்களால் பொதுநலன் கருதி வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிப்பு எண்.II (2)/ வணிகவரிகள் (ம) பதிவுத்துறை/532 (டி–11) 2017, பக்க எண். 84 இரண்டாம் பாகம் – பிரிவு 2, தமிழ்நாடு அரசு தனிச்சிறப்பு அரசிதழ், நாள்:29.06.2017–இல் கீழ்காணும் திருத்தங்கள் வெளியிடப்படுகிறது. அதாவது:–

## திருத்தம்

கூறப்பட்ட அறிவிக்கையில், பத்தி 1–இல் கீழ் உள்ள நிபந்தனை நீக்கப்படுகிறது.

2. அறிவிக்கை எண். II (2)/ வணிகவரிகள் (ம) பதிவுத்துறை/532 (டி–11) 2017, 29.06.2017–ன் உள்ள விலக்களிப்புகள், இந்த திருத்தப்பட்ட அறிவிக்கை மூலம் அனைத்து பதிவு பெற்ற நபர்களுக்கு 31.03.2018 வரை பொருந்தும்.

[அரசாணை நிலை எண். 137 *வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (1) 13 அக்டோபர் 2017*

*புரட்டாசி 27 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண்.II(2)/ வவப/858(a-13)/2017**

அதேசமயம் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவை வரிச் சட்டம் 2017–ன் (தமிழ்நாடு சட்டம் 19. 2017) விதிகளை செயல்படுத்துவதில் சிரமங்கள் தோன்றுகின்றன இனிமேல் இச்சட்டம் இந்த ஆணையில் கூறப்பட்ட சட்டம் என்று குறிப்பிடப்படும். இது கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 10–ன் விதிகள் வரை பொருந்தும்.

எனவே, இப்போது கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 172 –ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, குழுவின் பரிந்துரைகளின் படி, ஆளுநரால், இதன்மூலம் பின்தொடரும் ஆணை பிறப்பிக்கப் படுகிறது.

1. இந்த ஆணை தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (சிரமங்களை நீக்குவதற்காக) ஆணை 2017 என்று அழைக்கப்படும்.

2. சிரமங்களை அகற்றுவதற்காக
   i. கூறப்பட்ட சட்டம் அட்டவணை II –ல் பத்தி 6–ல் உட்கூறு (ஆ) –ல் சொல்லப்பட்ட ஒரு நபர் சரக்கு அல்லது / மற்றும் சேவை விநியோகம் செய்யும் அந்நபர் நீட்டிக்கப்பட்ட வைப்பு, கடன் அல்லது முன் பணத்தை கருத்தில் கொண்டு வட்டி அல்லது தள்ளுபடிகளை உள்ளடக்கிய விலக்கப்பட்ட சேவையை விநியோகிக்கும் போது அந்த கூறப்பட்ட நபர் பிரிவு 10–ல் கூறப்பட்ட இணக்க வரி திட்டத்திற்கு தகுதி உள்ளவர். ஆனால் அவர் அனைத்து கூறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்து இருக்க வேண்டும் என்பதை இது தெளிவுப்படுத்துகிறது.
   ii. மேலும்தெளிவுப்படுத்துவது என்னவென்றால், அவர் இணக்க வரி திட்டத்திற்கு தகுதியுள்ளவர் என்றும், அவரது மொத்த தொகையை கணக்கிடும் போது, விலக்குப் பெற்ற சேவைகள் வழங்கலில் நீட்டிக்கப்பட்ட வைப்பு, கடன் அல்லது முன்பணத்தை கருத்தில் கொண்ட வட்டி அல்லது தள்ளுபடிகளை உள்ளடக்கிய சேவைகளை கணக்கில் எடுத்துக்கொள்ள கூடாது.

முனைவர்.ச.சந்திரமௌலி,
அரசின் கூடுதல் தலைமை செயலாளர் (முகூபொ).